# தமிழ் வளர்ச்சிக் கழகம்
## செய்தி மின் மடல்
தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 2 பிப்ரவரி 2026

### உங்களுடன்

வணக்கம்.
பேராசிரியர் வ.ஜெயதேவன் மறைவு
தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும்
ஈடு செய்ய இயலாத இழப்பு.

முனைவர் வா.செ.குழந்தைசாமி
காலம் தொட்டு
பிப்ரவரி 4, 2026 வரை
முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத்
தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகளில்
ஈடுபட்டு வந்தவர்!

செம்மொழி மாநாட்டு
ஆய்வரங்கப் பணிகளில்
தோள் கொடுத்தவர்!

தமிழ் லெக்சிகன்
திருந்திய பதிப்பைச்
செம்பதிப்பாகக் கொண்டுவர
ஓய்வு பெற்ற பிறகும்
உழைத்து வந்தவர்!

அரசியல் மாற்றங்கள்
அவரது ஆய்வுப் பணியைப்
பாதிக்க விடாமல் பாதுகாத்தவர்
மறைந்துவிட்டார்!

தமிழியல் களஞ்சியம்
மாணவர் அகராதி
சிந்தனைக் களஞ்சியம்
தமிழ் நூல் விவரக் களஞ்சியம்
சொல் புதிது ஆகிய
அவரோடு சேர்ந்து தொடங்கிய
தமிழ் வளர்ச்சிக் கழகத்
திட்டப் பணிகள்
தொய்வின்றித் தொடர
அவர் நினைவுகள் வழிகாட்டும்!

திட்டப் பணிகளின் விளைச்சலில்
அவர் என்றென்றும் இருப்பார்!

***

அடுத்த நிதியாண்டுக்கான
தமிழ் வளர்ச்சிக்கழகத்
திட்டங்களுக்கு
வரத் தொடங்கியுள்ளன
முன்மொழிவுகள்!

செய்யறிவுக் காலத்தில்
வாழ்வதை நினைவில் கொண்டு
திட்டங்களை
உறுதிப்படுத்தும்முன்
கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது
செய்யறிவுத் தொழில் நுட்பத்துடன்!

செய்யறிவுத் தொழில் நுட்பத்திற்குத்
தேவைப்படும்
தமிழ்த் தொடர்பான
தகவல்களைத்
தரவுகளாக்கித் தரும்
திட்டப் பணிகளுக்கு
முன்னுரிமை வழங்க வேண்டுவது
காலத்தின் தேவையாக
இருப்பதை உணர்ந்து
செயற்பட வேண்டியுள்ளது.

முன்பு செய்திருக்கும்
பணிகளையே
செம்மைப்படுத்த
நினைப்பதை விடவும்
செய்யாத பணிகளில்
தேவைப்படும் பணிகளில்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
ஈடுபட விரும்புகிறது!

உங்கள் மனதில்
கருவாக இருக்கும் திட்டங்களைத்
தெரிவித்து உதவுங்கள்!

செய்யறிவு உலகத்திற்குத்
தேவையானதைத் தர
சேர்ந்து செயற்படுவோம்!!

அன்புடன்
ம.ரா.



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவலர் குழு உறுப்பினரும் ஆட்சிக் குழுவின் துணைத் தலைவர்களுள் ஒருவரும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொருளாளரும் முதன்மைப் பதிப்பாசிரியருமான பேராசிரியர் முனைவர் வ.ஜெயதேவன் அவர்கள் 04.02.2026 அன்று இயற்கை எய்தினார்கள். அன்னாரது இழப்பு தமிழ் உலகுக்கு பேரிழப்பாகும் குறிப்பாக அவரது மறைவினால் அகராதியியல் தளத்தில் நிரப்பவியலாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் அவருக்கு நினைவஞ்சலி செலுத்துகிறோம்.

07.02.2026 அன்று அமரர் வ.ஜெயதேவன் அவர்களின் இல்லத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அறங்காவலர் குழுத் தலைவர் மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர் மாண்பமை ப.சிதம்பரம் ஆட்சிக் குழுத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன், அறங்காவலர் குழு உறுப்பினர் பத்மபூஷன் நல்லி குப்புசாமி மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்கள், புரவலர் சிவாலயம் ஜெ.மோகன், பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் பெ.காளிராஜ், முனைவர் மு.ராமசுவாமி ஆகியோர் அமரர் வ.ஜெயதேவன் அவர்களுடனான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



## நினைவேந்தல்



19.02.2026 அன்று அமரர் வ. ஜெயதேவன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு முனைவர் வ. ஜெயதேவன் அவர்களின் சிறப்புகளை, நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்.

## சந்திப்பு

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு நன்கொடையாக ரூபாய் பத்து இலட்சம் வழங்கிய அமெரிக்கவாழ் தமிழ்ப் பெருந்தகை திரு. நெகமம் கந்தசாமி மாணிக்கம் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகம் அலுவலகம் வந்து ஆட்சிக் குழுத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் ஆட்சிக் குழு உறுப்பினரும் புரவலருமான சிவாலயம் ஜெ. மோகன், சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத்துறைப் பேராசிரியரும் தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளருமான முனவவர் சா. சரவணன் ஆகியோருடன் கலந்துரையாடினார்கள்.



# சொல்புதிது 10

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பத்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 18.02.2026 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Air shuttle | விமான வளாக உந்து |
| 2 | Airport Lounge | விமானநிலையத் தனி ஓய்வறை |
| 3 | Angel Fund | வளர்நல நிதி |
| 4 | Angel investor | வளர்நல முதலீட்டாளர் |
| 5 | Bread Omelette | ரொட்டி முட்டையடை |
| 6 | Chicken lollipop | கோழிக்கறிக் குச்சியுருண்டை |
| 7 | Face authentication | முகவழி உறுதி |
| 8 | Grand master | பெருவாகையர் |
| 9 | Growbag | செடிவளர் பை |
| 10 | Lip gloss | இதழ்ப் பொலிவூட்டி |
| 11 | Lookout notice | தேடல் அறிவிப்பு |
| 12 | M sand | மாற்று மணல் |
| 13 | Photo gallery | படக்காட்சியகம் |
| 14 | Photoshoot | ஒளிப்பட எடுப்பு |
| 15 | Prank call | பகடி அழைப்பு |
| 16 | Ramp walk | மேடைநடை |
| 17 | Rumble strips | வேகத்தடைப் பட்டை |
| 18 | Satellite Bus | இணைப் பேருந்து |
| 19 | Semislepper seat | சாய்விருக்கை |
| 20 | Slepper seat | படுக்கையிருக்கை |

| | | |
|---|---|---|
| 21 | Soft bristle | மெல்லிழைத் தூரி |
| 22 | Spam call | பயனிலா அழைப்பு |
| 23 | Tea master | தேநீர் போடுநர் |
| 24 | Translocation | இடம்பெயர்வு |
| 25 | U turn | எதிர்த்திசைத் திருப்பம் / திசை எதிர்த் திருப்பம் |
| 26 | Wheelchair ramp | சக்கரநாற்காலிப் பாதை |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், கஸ்தூரிராஜா, சா.சரவணன், பாரதி பாலன், மா.இளங்கோவன், மற்றும் திருவாளர்கள் ராஜ் கண்ணன், மு.முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த ஆங்கிலச் சொற்களை எவரும் அனுப்பலாம்.

## திட்டம் - ஆய்வு

மாணவர் அகராதி – செயல் திட்டம்–தொடர் பணிகள் தொடர்பாக 11.02.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் அகராதி உள்ளடக்கச் சொற்களின் பட்டியல், தலைச்சொற்கள் தெரிவு செய்து வகைப்படுத்தல், தொடரடைவு தயாரித்தல், பதிவுக்கட்டமைவு போன்றன குறித்தும் அதனைச் செயலாக்கம் செய்து முடித்திட கால அட்டவணை வரையறை செய்தல் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 11.03.2026 அன்று தொடர் செயன்மைகள் குறித்தும் பணி முன்னேற்றம் குறித்தும் ஆய்வுசெய்யப்படலாம் என முடிவு செய்யப்பட்டது.

